**DEPOSITION OF WITNESS**

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

**Judicial Magistrate Court At Oddanchatram**

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 140 | 2017 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**1 | கருப்பாத்தாள் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | பழனிச்சாமி | |
| முகவரி: | | | |
| **Religion** / **Caste** : | | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 29/01/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் சக்கம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான், எனது மகன் பொன்னுச்சாமி, எனது மகள் பொன்னத்தாள் ஆகியோர் தனியாக ஒரு வீட்டில் வசித்து வருகிறோம். எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் மற்றும் எனது கணவர் பழனிச்சாமிக்கும் சொந்தமான வீடு ஒன்று எங்களது ஊரில் உள்ளது.மேற்படி வீடை என்னையும் மற்றும் எனது பிள்ளைகளையும்கேட்காமல் எங்களுக்கு தெரியாமல் எனது கணவர் பழனிச்சாமி அவரது தம்பி கந்தசாமிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் மேற்படி வீட்டை பழனிச்சாமி, கந்தசாமி, பொன்னுச்சாமி, கருப்புச்சாமி பொன்னுச்சாமியின் மனைவி ஆகியோர் இடிப்பதற்காக வந்த போது ஏன் இடிக்கிறீர்கள் என்று கேட்டோம் அப்போது தான் மேற்படி விவரம் தெரிந்தது அவர்கள் அரிவாள், கட்டை வைத்து இருந்தார்கள். கட்டையால் என்னை காலில் அடித்து காலை ஒடித்துவிட்டார்கள். மேற்படி காயத்திற்காக நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

சம்பவம் எப்போது நடந்தது என்றால் 2016ல் நடந்தது. எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 17 மணிக்கு நடந்தது. எத்தனை மணிக்கு நடந்தது என்று புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் மறந்துவிட்டேன். புகார் போலீஸ் ஸ்டேசனில் போலீசார் எழுதினார்கள் என்றால் சரிதான். என்ன என்ன பேசினோம் என்று புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. ஆஸ்பத்திரிக்கு சென்றவுடன் ஸ்டேசனுக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கும் பழனிச்சாமிக்கும் இடம் சொந்தம் என்று சொல்வதை காட்டிட பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி இடம் பழனிச்சாமிக்கு சொந்தமானது என்றும், நாங்கள் தான் பழனிச்சாமியிடம் சென்று தகராறு செய்ததாகவும் அதற்காக பழனிச்சாமி புகார் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காக நாங்கள் முதலில் புகார் கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சியம் நான் சரிவர சொல்லிடாததற்கு காரணம் வழககு சம்பவம் உண்மையில்லை என்பதால்தான் காரணம்என்றால் சரியல்ல. போலீசார் எழுதிய புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றும் நான் சொல்வதுபோன்று எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**LTI. (sd) Karuppathal**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.**

**(sd) R.Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram.**
**Date** : 29/01/2021

# DEPOSITION OF WITNESS

(**Chapter XXIII Code of Criminal Procedure**)

## Judicial Magistrate Court At Oddanchatram

| **Case Type** | **No** | **Year** | |
|---|---|---|---|
| **CC** | 140 | 2017 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| **LW** | **PW**2 | கருப்புச்சாமி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | | |
| முகவரி: | | | |
| **Religion / Caste** : | ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST*** | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of** 1873 **of the day of**

<u>**Examination Date** / சாட்சி விசாரணை தேதி :- 29/01/2021</u>

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

நான் குப்பணம்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் எண்டர்பிரேஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 கருப்பாத்தாள் எனது மாமியார் ஆவார். 1ம் எதிரி பழனிச்சாமி எனது மாமனார் ஆவார். 2வது எதிரி கந்தசாமி எனக்கு சின்ன மாமனார் ஆவார். 3 முதல் 7 வரையிலான எதிரிகள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். அதில் 2ம் எதிரி கந்தசாமியும் 5ம் எதிரி கருப்பணனும் இறந்துவிட்டார்கள் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 2016ம் வருடம் 5வது மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை எனது மாமியாரான அ.சா.1 மற்றும் எனது மனைவி, மச்சுணனுக்கு சொந்தமான வீடு மற்றும் நிலங்களை எனதுமாமனாரான 1ம் எதிரி எனது மனைவி, மச்சுணன் எனது மாமியாருக்கு தெரியாமல் விற்றுவிட்டார்.மேற்படி வீட்டை இடிப்பதற்காக எதிரிகள் வந்தபோது தான் மேற்படி வீடு எங்களுக்கு தெரியாமல் விற்கபட்டுள்ள விவரம் தெரியவந்தது. இதுசம்பந்தமாக பழனியில் வழக்கு தாக்கல்செய்துள்ளோம். வீடை இடிக்க வந்த போது கேட்க சென்ற எனது மாமியாரான அ.சா.1 ஐ அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும் எதிரிகள் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களை கொண்டுவந்ததாகவும் அ.சா.1 றிற்கு காயம் ஏற்பட்டுள்ளதாக வெளியே இருந்த

எனக்கு தகவல் கிடைத்து உடடினயாக மேற்படி தகவலை அம்பிளிக்கை காவல்நிலையத்திற்கு சொன்னேன். காயம்பட்ட எனது மாமியாரான அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

புகாரை நான் தான் கொடுத்தேனா என்றால் நான் தான் கொடுத்தேன். சம்பவம் நடந்த போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**LTI** (**sd**) **Karuppasamy**
**Signature of the witness**
(சாட்சியின் கையெழுத்து)

**Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct**.

(**sd**) **R**.**Pandy**

**Judicial Magistrate**
**Oddanchatram**.
**Date** : 29/01/2021